# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S. No. 105/2006

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 12.09.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சக்திவேல் Father's Name : ஆறுமுகம்

துவக்க நேரம்: 01.00 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) பிரதிவாதி சுந்தராஜனின் தந்தை பெயர் தேவராஜ் என்றால் சரிதான். தேவராஜின் தந்தை பெயர் நல்லதம்பி. மேற்படி நல்லதம்பிக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5 வாரிசுகள், அவர்கள் ஆனந்தஉடையார், அப்பாவுஉடையார், தேவராஜ், பொன்னுசாமி ஆகிய 4 ஆண் வாரிசுகளும், அன்னம்மாள் என்ற பெண் வாரிசும் உள்ளனர். ஆனந்தஉடையாருக்கு ஆண் வாரிசுகள் இல்லை என்றாலும், பெண் வாரிசுகள் மட்டும்தான் உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் விருதம்பாள், தனபாக்கியம், கலைச்செல்வி ஆகியோர்கள் என்றால் சரிதான். எனது தந்தை மேற்படி தனபாக்கியத்தை திருமணம் செய்து கொண்டார் என்றாலும எனது சித்தப்பா கலைச்செல்வியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

2) தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களான சர்வே எண்கள்.60/3, 60/4, 60/6, 60/7, 67/1, 67/3, 67/4 ஆகிய சொத்துக்களும் ஆதியில் நல்லதம்பிக்கு பாத்தியப்பட்டது என்றால் இருக்கலாம். நல்லதம்பியின் வாரிசுகள் 5 பேரும் அவர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து பத்திரத்தை பதிவு செய்துக்கொண்டார்கள்

என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தாவான ஆனந்தஉடையாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் கிடைத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அவர் எனது தாயார் பெயருக்கு உயில் எழுதி வைத்ததன் அடிப்படையில் அந்த சொத்திற்கு எனது தாயார் பெயரில் பட்டா வாங்கினோம்.

3) எனது தாத்தா எனது தாயாருக்கு எழுதிவைத்த உயிலை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன் ஆனால் படிக்கவில்லை. அதில் எழுதப்பட்டுள்ள சொத்துக்களின் சர்வே எண்கள் பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1-ன் உள்ள சொத்தை யாரிடமிருந்து எனது தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் அப்பாவுடையார் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரைய பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது போல் ச.எண்.67/2-ல் கிணறு இல்லை என்றாலும் ச.எண்.67/3-ல் கிணறு உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரைய பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களுக்கு சகல மாமூல் வாய்க்கால், வழிவரப்பு, பாத்தியமும், சகல மாமூல் வண்டித்தட பாத்தியமும் உட்பட பூராவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) வா.த.சா.ஆ.1-ன் உள்ள சொத்தின் ச.எண்.60/6A, 60/7A ஆகிய சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.60/6B, 60/7B ஆகிய சொத்துகள் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிக்கும், மேற்படி சொத்துக்களுக்குண்டான வாய்க்கால் வழிவரப்பு, வண்டித்தட பாத்தியம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ச.எண்.60/6A, 60/7A ஆகிய நிலங்கள் நஞ்சை நிலங்கள் என்றாலும் ஏரி பாசனம் உள்ள நிலங்கள் என்றாலும் நஞ்சை நிலங்கள்தான் ஆனால் ஏரிபாசனம் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி நிலங்களுக்கு ஏரிபாசன வசதி உள்ளது என்றாலும் சரியல்ல, ஏரிபாசன வசதி முன்பு இருந்தது ஆனால் தற்பொழுது அங்கு சாலை அமைத்ததால் பாசன வசதி இல்லை.

5) என்னிடம் காட்டப்படும் ஆவணமானது கடந்த 31.03.1947-ல் ச.எண்.60/6, 60/7-ல் உள்ள நிலங்களை நல்லதம்பி உடையார் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **<u>பி.வா.த.சா.ஆ.1-</u>**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு "கல்லேரி ராஜவாய்க்காலிருந்து இந்த ஸ்தலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி கொள்ள தங்கவேல் நிலத்தின்பேரில் வரும் வாய்க்கால் பாத்தியமும் போகவர தடப்பாத்தியமும் என கண்டுள்ளது" என்றால் சரிதான். ச.எண்.60/6, 60/7-ல் உள்ள நிலங்கள்தான் ச.எண்.60/6A, 60/6B எனவும் ச.எண்.60/7A, 60/7B என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தற்பொழுது மேற்படி உட்பிரிவுகளுக்கு குறித்து தெரியவில்லை என வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) ச.எண்.60/6A, 60/7A-ல் உள்ள நிலங்களுக்கு தென்புறத்தில் ச.எண். 60/6B, 60/7B உள்ளது என்றால சரிதான். எனது நிலத்திற்கு மேற்கு புறத்தில் யார் நிலம் உள்ளது என்றால் எனது தாயார் தனபாக்கியத்திற்கு நிலம் உள்ளது. ச.எண்.60/6A, 60/7A-ல் உள்ள நிலங்களுக்கு கிழக்குபுறத்தில் தென்னரசு நிலமும், ச.எண். 60/6B, 60/7B நிலத்திற்கு கிழக்கிலும், தெற்கிலும் எனது நிலமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களுக்கு மேற்குபுறத்தில் ச.எண்.60/2, 60/1A, 60/4-ல் உள்ள நிலங்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ச.எண்.60/3-ல் உள்ள கிணற்றில் எனக்கு கூட்டுபாகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றிலிருந்து தாத்தா கிரையம் பெற்ற சொத்திற்கு தண்ணீர் பாய்ச்ச உரிமை உள்ளது என்றால் எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து அந்த கிணற்றில் தண்ணீர் இல்லை.

7) நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.1-ன்படி ச.எண்.60/3-ல் உள்ள கிணற்றில் எனது தாத்தாவிற்கு தண்ணீர் பாய்ச்சும் உரிமை உள்ளது என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. ச.எண். 60/6B, 60/7B ஆகிய நிலங்களுக்கு நான்குபுறத்திலும் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். கடந்த 1947 நல்லதம்பி உடையார் கிரையம் பெற்றதிலிருந்து அதில் விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.60/6B. 60/7B ஆகிய நிலங்கள் விவசாயம் செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை ஆண்டுகளாக மேற்படி நிலத்தில் விவசாயம் செய்யப்படவில்லை என்றால் சுமார் 10 ஆண்டுகள் ஆகும்.

8) ச.எண்.60/1,60/2-ல் உள்ள நிலத்திற்கு தென்புறத்தில் கிழமேலாக கல்லேரி வாய்க்கால் செல்கிறது என்றால் முன்பு இருந்தது ஆனால் தற்பொழுது அங்கு சாலை போடப்பட்டுள்ளது. மேற்படி கல்லேரி வாய்க்கால் வருவாய் ஆவணங்களில் ச.எண்.60/8-என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கல்லேரி வாய்க்காலுக்கு தென்புறத்தில் யார் நிலம் உள்ளது என்றால் ச.எண்.60/1,60/2-ற்கு தென்புறத்தில் என்னுடைய நிலம் உள்ளது. மேற்படி கல்லேரி வாய்க்கால் இருந்த இடத்தில் சாலை போடப்பட்டதாக சொல்லும் பட்சத்தில் அந்த சாலை எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டது என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு போடப்பட்டுள்ளது. சாலை போடுவதற்கு முன்பு வாய்க்கால் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் ச.எண்.60/8-ல் கல்லேரி வாய்க்கால் உள்ளது என்றாலும் அங்கு எந்த பாதையும் போடவில்லை என்றாலும் சரியல்ல.

9) நல்லதம்பி உடையார் வாரிசுகள் எதன் அடிப்படையில் பாகப்பிரித்துள்ளனர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நல்லதம்பி வாரிசுகளுக்கு இடையே பிரிக்கப்பட்ட பாகத்தின் அடிப்படையில் அந்ததெந்த பாகஸ்தர்கள் அவரவர் பாகத்தை

அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா ஆனந்த உடையார் அவரது பாகத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் ஆமாம். அதேபோல் அப்பாவு உடையார் அவரது பாகத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் ஆமாம்.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 02.01 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.105/2006, Dt.12.09.2025.